[1973 மார்ச் 28

மத்திய பாசன ஆராய்ச்சி நிலையம்

* 550 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் திட்டக்குழு தமிழகத்தில் பயிர்ப்பாசன ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் நிறுவியுள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கே எப்போது நிறுவபபட்டுள்ளது?

(உ) அதன் முக்கிய குறிக்கோள் யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ), (இ) & (உ) தமிழ்நாட்டில், மத்திய திட்ட ஆணைக்குழுவினுல் பாசன ஆராய்ச்சி நிலையம் எதுவும் நிறுவப் படவில்லை. எனினும், மாநில அரசு கீழ்க்கண்ட இரண்டு நிலையங்களை நிறுவி யுள்ளது :—

(1) பாசன ஆராய்ச்சி நிலையம், பூண்டி, செங்கற்பட்டு மாவட்டம்.

(2) பாசன நீரைக் கையாளுதல் குறித்த ஆராய்ச்சி நிலையம், காட்டுத் தோட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

நீரியல் குறித்த முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காகப் பூண்டியில் 1945 ஆம் ஆண்டில் பாசன ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்பட்டது. இம் மாநிலத்தில் குறிப்பாக காவிரி கயவாய்ப் பகுதியில் மண்வளம் பாசன நீரைக் கையாளுதல் குறித்த பிரச்சினைகளில் ஆய்வு குறித்த ஆராய்ச்சியை மேற் கொள்வதற்காக 1971-ல் தஞ்சாவூர் மாவட்டத்தில் நீர்நிர்வாக ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, தமிழகத்தில் தண்ணீர் மிகக் குறைவு. ஆதலால் பாசனத் துறையில் ஆராய்ச்சி நடத்தி தண்ணீரை மிச்சப்படுத்த என்ன வழி என்பதைக் கண்டுபிடிப்பது அவசியம். ஆதலால் உடனடியாக இந்திய அரசாங்கத்திற்கு இதைத் தெரிவித்து ஒரு ரிசர்ச் இன்ஸ்டியூட் ஆரம்பிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவரவர்களே, இப்படி வரும் என்று எதிர்பார்த்து ஏற்கனவே தஞ்சை மாவட்டத்தில் காட்டுத் தோட்டத்தில் வாட்டர் மானேஜ்மெண்ட் ஸ்கீம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதைத் தொடர்ந்து இப்போது பட்டுக்கோட்டை.யில் ஒன்றும் எற்படுத்தப் பட்டு வருகிறது. இப்போது பி.எ.பி.-ன் கீழ் கோவையில் ஒன்று நிறுவப்பட்டு ஆராய்ச்சி முறையாக நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்

(அ) அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று நடைபெறுவதாக இருந்த அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் 30—3—1973-க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்போது சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் திருமதி டி. என். அனந்தநாயகி அவர்கள் ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை மாண்புமிகு கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் ராஜமன்னார் கமிட்டியின் அறிக்கையை விவாதிக்க ஒரு நாள் ஒதுக்குவதாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவன ஈர்ப்பு பிரச்னை முடியட்டும். அதற்குப் பிறகு நீங்கள் கேள்வியைக் கேட்கலாம்.

3. கவன ஈர்ப்பு.

மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டிருப்பது குறித்து

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I wish to call the attention of the Hon. the Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the closure of Annamalai University due to some clash between two groups of students. தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அடிக்கடி நடக்கக் கூடிய நடவடிக்கை. . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member may just read the notice. After the reply was given by the Hon. Minister, the hon. Member can ask for clarification.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 6,000 ஆகும். அதில் 4,000 பேர்கள் கலை, அறிவியல் பிரிவைச் சேர்ந்தவர்கள்.